
## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில்

### தமிழ்நாட்டுக்கு திட்டங்களும் இல்லை – அடுப்பு எரிக்க கேஸ் சிலிண்டரும் இல்லை –

# தமிழ்நாட்டை தொடந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் கூட்டணியையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்!



மதுரை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

**நாள் : 15.03.2026 – நேரம் – காலை: 10.30 மணி**

| வ. எண் | கழக அமைப்பு – ஒன்றியம்/நகரம்/பகுதி/பேரூர் | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 1. | மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு, வண்டியூர் | கடச்சனேந்தல் |
| 2. | மதுரை மேற்கு வடக்கு, கண்ணனேந்தல், திருப்பாலை, ஆனையூர். | ஆட்டோ நிறுத்தம் அருகில், ஊமச்சிகுளம். |
| 3. | கொட்டாம்பட்டி கிழக்கு, மேற்கு, கொட்டாம்பட்டி வடக்கு, தெற்கு | கொட்டாம்பட்டி பேருந்து நிலையம் |
| 4. | மேலூர் மேற்கு, மேலூர் வடக்கு, அ.வள்ளாலபட்டி. | அ.வள்ளாலபட்டி மந்தை |
| 5. | மேலூர் கிழக்கு, மேலூர் தெற்கு, மேலூர் நகர். | தபால் நிலையம் எதிரில் பேங்க் ரோடு, மேலூர். |
| 6. | அலங்காநல்லூர் கிழக்கு, அலங்காநல்லூர் வடக்கு, பாலமேடு | ஸ்டேட் பேங்க் எதிரில், பாலமேடு. |
| 7. | அலங்காநல்லூர் மேற்கு, தெற்கு, அலங்காநல்லூர் பேரூர், மதுரை மேற்கு | ஸ்டேட் பேங்க் எதிரில், அலங்காநல்லூர். |
| 8. | வாடிப்பட்டி வடக்கு, வாடிப்பட்டி பேரூர் | ஸ்டேட் பேங்க் எதிரில், வாடிப்பட்டி |
| 9. | வாடிப்பட்டி தெற்கு, சோழவந்தான் பேரூர் | ஸ்டேட் பேங்க் எதிரில், சோழவந்தான். |
| 10. | பரவை, மதுரை வடமேற்கு கோவில்பாப்பாகுடி, கூடல்நகர், விளாங்குடி, திருப்பரங்குன்றம் வடக்கு | தபால் நிலையம் எதிரில், பாரதி மைதானம், பரவை. |
| 11. | காளவாசல், பழங்காநத்தம், ஜெய்ஹிந்த்புரம், ஜீவாநகர், சோழையழகுபுரம், பைக்காரா, துரைச்சாமிநகர், பெத்தானியாபுரம், சம்பட்டிபுரம், | குரு தியேட்டர் எதிரில், அண்ணா மெயின் வீதி, பெத்தானியாபுரம். |

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் – நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகள் அனைவரும் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

**அமைச்சர் பி.மூர்த்தி**

செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.

---

### தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர்கள் ஒப்புதலோடு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் – கு.ஓம். சிவசக்திவேல் மாரியம்மன் கோவில் தெரு, ஏனாதிமங்கலம் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய் நல்லூர் வட்டம் – 607107, விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் – ஏ.கே.எஸ். ராஜேந்திரன் சென்னை மெயின் ரோடு, அய்யூர் அகரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் – எம்.ஆர். ராஜீவ்காந்தி ஆ.கூடலூர், ஆயந்தூர் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) அ. தர்மலிங்கம் மாரியம்மன் கோவில் தெரு, மேலக்காரணை மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம் – 605202, விழுப்புரம் மாவட்டம். 2) சி.அ. ஏழுமலை 323, பெரிய பாறை தெரு, அம்பேத்கர் நகர், வீரபாண்டி மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) சு. சுகுமார் 24, மாரியம்மன் கோவில் தெரு, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம். 4) கா. ஏழுமலை சிவ நந்திபுரம் தெரு, மெய்யூர் மற்றும் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ஏ. முருகையன் குடவக்காரி தெரு, வீரணாம்பட்டு, திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) வெ. பழனி 3/33, மாரியம்மன் கோவில் தெரு, ராதாபுரம், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

## திருப்பூர் கிழக்கு மாவட்டம்.

தலைவர் – ப. வேலுச்சாமி 14/21, எம்.ஜி.ஆர். நகர், எக்கட்டாம்பாளையம், சாணார்பாளையம் அஞ்சல், சென்னிமலை – 638051, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – ப. காந்தி 1/180, எம்.காளியபாளையம், மூலனூர் – 638106, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – சு. சக்திவேல் 14/17, பாப்பன்பாளையம், மேட்டுப்பாளையம் அஞ்சல், வெள்ளக்கோவில் – 638111, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) த. சீனிவாசன் 105, மேற்கு வீதி, மணக்கடவு அஞ்சல், தாராபுரம் – 638673, திருப்பூர் மாவட்டம். 2) கே. பொன்னுசாமி 1/675, வெள்ளகரடு செந்தில் நகர் ஸ்கூல் விதி, முதலிபாளையம் சிட்கோ (அ) – 641606, திருப்பூர் மாவட்டம். 3) ப. பெரியசாமி 129/113, மேட்டூர், நத்தப்பாளையம், தூரம்பாடி அஞ்சல் – 638106, திருப்பூர் மாவட்டம். 4) சி. தியாகராஜன் காங்கேயம்பாளையம், காடையூர் அஞ்சல், காங்கேயம் – 638701, திருப்பூர் மாவட்டம். 5) சே. பிரபு சேமான் 7/89, கோவில்பாளையம், சிவன்மலை – 641604, திருப்பூர் மாவட்டம். 6) எஸ். தினகரன் 32, சொரியான் கிணத்துப்பாளையம், வெள்ளக்கோவில் – 638111, திருப்பூர் மாவட்டம்.

## திருப்பூர் தெற்கு மாவட்டம்.

தலைவர் – வி. செல்வராஜ் 1/21, அம்பேத்கர் வீதி, ஊஞ்சவேலம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி – 642003, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – கு. முருகன் 77, செல்லம் குடியிருப்பு, காந்தி நகர் – 2, உடுமலைப்பேட்டை – 642154, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் – மா. கன்னிமுத்து 3/103, அறிவு நிதி இல்லம், ரங்கபாளையம், பெரியப்பட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை – 642201, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) மா. சக்திவேல் 114, மதியழகன் நகர், கணியூர் அஞ்சல், மடத்துக்குளம் – 642203, திருப்பூர் மாவட்டம். 2) ப. லோகுபாண்டியன் 4, காந்தி சந்து – 2, பழனி சாலை, உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம். 3) கி. பழனிச்சாமி 5/90, கிழக்கு தெரு, சோழமாதேவி, மடத்துக்குளம் – 642113, திருப்பூர் மாவட்டம். 4) வீ. மாரிமுத்து 2/137, கொ. காளியாபுரம், வெள்ளாளபாளையம் அஞ்சல், பொள்ளாச்சி – 642120, திருப்பூர் மாவட்டம். 5) வே. பழனிச்சாமி 4/258ஏ, கலைஞர் நகர், எலையமுத்தூர், உடுமலைப் பேட்டை – 642154, திருப்பூர் மாவட்டம். 6) ஆ. சின்னக்கண்ணன் 13/253, ராஜகணபதி நகர், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி – 642003, திருப்பூர் மாவட்டம்.

## திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

தலைவர் – எஸ். ராஜேஷ் அம்மன் கோவில் தெரு, நெடுவாழி, இராதாபுரம், திருநெல்வேலி.

துணைத் தலைவர் – எஸ். சுயம்பு கீழத் தெரு, கீக்குளம், திருநெல்வேலி.

அமைப்பாளர் – பி.டி. சேகர் 21/27ஏ, வடக்கு தெரு, நம்பி தோப்பு, திருக்குறுங்குடி அஞ்சல், நாங்குநேரி தாலுக்கா, திருநெல்வேலி.

துணை அமைப்பாளர் – சி. வெற்றிவேல் 5/1, செண்பகராமபுரம், பணகுடி – 627109, திருநெல்வேலி.

## திருப்பத்தூர் மாவட்டம்

திருப்பத்தூர் மாவட்டம் மறுசீரமைக்கப்பட்டதால் ஏற்கனவே ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக நியமிக்கப்பட்ட சே. குமார் அவர்கள் வேலூர் தெற்கு மாவட்ட நிர்வாகத்தில் வருவதால் அவருக்கு பதிலாக **கு. பழநி** (9, 2வது தெரு, பன்னீர்செல்வம் நகர், புதுமனை, ஆம்பூர் – 635802) அவர்கள் திருப்பத்தூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராக நியமிக்கப்படுகிறார்.

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணை அமைப்பாளராக **அ. பாலமுருகன்** (வீரவனூர், வைரவனேந்தல், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"** **ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ.,**
சென்னை – 18 செயலாளர்
நாள்- 12-03-2026. தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு

---

### கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு NDA அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து

# புதுக்கோட்டை வடக்கு-தெற்கு மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர்களில் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் எஸ்.ரகுபதி - கே.கே.செல்லப்பாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, மார்ச் 15–

புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:





ஒன்றிய பா.ஜ.க NDA அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையினாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததன் விளைவாகவும் இன்று நாடு முழுவதும் சமையல் கேஸ் சிலிண்டருக்கும் வணிக ரீதியிலான கேஸ் சிலிண்டருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டு மக்கள் அவதியுற்று வருகின்றனர். உணவகங்கள் வணிக நிறுவனங்கள் இயங்க முடியாத அவலநிலை ஏற்பட்டுள்ளது. சிறு, குறு தொழில்கள் உள்ள அதிக தொழில் வளமிக்க தமிழ்நாடு இந்த கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதால் ஒன்றிய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து நிலைமையை சரிசெய்ய வேண்டும் என முதலமைச்சர் அவர்கள் இந்திய பிரதமர் மோடி அவர்களுக்கு கடிதம் வாயிலாக வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் தற்போது வரை மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கி நிலைமையை சீராக்க முறையான நடவடிக்கை எடுக்கவில்லை ஒன்றிய NDA.அரசு. நாடாளுமன்றத்தில் இதைப்பற்றி பேசவே பிரதமர் மறுத்து வருவது மற்றும் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி, நூறு நாள் வேலை திட்ட நிதி, குடிநீர் இணைப்பு நீதி என எந்த நிதியையும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பது. கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டம், ஓசூர் விமான நிலையம் என எந்தவொரு வளர்ச்சித் திட்டத்திற்கும் அனுமதி தராமல் முட்டுக்கட்டை போட்டு வருவது. மும்மொழி திணிப்பு என்ற பெயரில் தமிழ்மொழியை அழிக்க துடிப்பது. கீழடி அகழ்வாய்வு முடிவுகளை ஏற்க மறுப்பது என தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது ஒன்றிய பா.ஜ.க அரசு இப்படி தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து இன்று (15.03.2026-ஞாயிற்றுக் கிழமை) காலை 10.00 மணியளவில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தில் உள்ள மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

அதுசமயம் சம்பந்தப்பட்டவர்கள் அந்தந்த ஒருங்கிணைந்த ஒன்றியங்கள் நகரம். பேரூர்களில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் புதுக்கோட்டை வடக்கு, தெற்கு மாவட்டத்தை சோந்த தி.மு.க. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை. வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள். இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள். முன்னாள், இந்தாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சிமன்றத்தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், ஸ்டாலினின் மகளிர் படை சேர்ந்த நிர்வாகிகள் பொது மக்கள், வர்த்தகர்கள் அனைவரும் பெருந்திரளாக அவரவர் பகுதிகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு தங்களது அறிக்கையில் கூறி உள்ளனர்.

---

## 5G மொபைல் சேவையை,

# கிராமப்புறங்களில் விரிவுபடுத்தும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா?

### மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி?

புதுடெல்லி, மார்ச். 15–

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர், எஸ். ஆர். சிவலிங்கம் 12 மார்ச் 2026 அன்று மாநிலங்களவையில், 5G மொபைல் சேவையை, கிராமப்புற மக்களும் பயன்படுத்தும் வகையில், அகன்ற அலை வரிசை சேவை விரிவுபடுத்தும் திட்டங்கள் ஏதேனும் ஒன்றிய அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? என்றும், அதனை விரைவாக நிறைற்றேவும், இந்தியாவின் அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவடையச் செய்யவும் ஏதேனும் கொள்கை முடிவுகள்

எடுக்கப்பட்டுள்ளனவா? என்றும் அதன் விவரங்களை மேலவை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா?



என்று ஒன்றிய அரசின் தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மாசனி சந்திரசேகர் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

இந்தியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 86 சதவீதம் அளவிற்கு 5G மொபைல் சேவை கிடைத்துள்ளது என்றும், அகன்ற அலை வரிசை சேவைகள் அனைத்து கிராமப்புறங்களுக்கும கிடைக்கவும், அனைவரும் இதன்மூலம் பயன்களைப் பெறவும் டிஜிட்டல் பாரத் நிதி என்ற திட்டத்தின் மூலம் உரிய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், பாரத் நெட் என்ற திட்டத்தின் மூலம் கடந்த சனவரி 2026 வரையில் 2,14,921 கிராமங்களுக்கு 5G அலைவரிசை சேவை கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும், 4G மொபைல் சேவை 23,994 மொபைல் கோபுரங்களின் வழியாக நாடு முழுவதும் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றும், சென்னைக்கும் அந்தமான் தீவுகளுக்கும் இடையில் 2312 கி.மீ. தூரத்திற்கும், கொச்சிக்கும் இலட்சத்தீவிற்கும் இடையில் 1869 கி.மீ. தூரத்திற்கும் கண்ணாடி இழை கேபிள்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய அரசின் தொலைத் தொடர்பு துறை இணையமைச்சர் டாக்டர் பெம்மாசனி சந்திரசேகர் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

# எரிவாயு - சேலம் மத்திய மாவட்டக் கழகம் சார்பில் இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பு!

சேலம், மார்ச்15–

சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



வீடுகளுக்கு சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டு காலி சிலிண்டர்களோடு மக்களை தெருவில் அலையவிட்ட மத்திய அரசு ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடுத்து வரும் போரினை காரணம் சொல்லி வருகின்றது. எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காமல் வணிகப் பயன்பாட்டு சிலிண்டர்கள் தட்டுப்பாடு மற்றும் பதுக்கள் காரணமாக ஹோட்டல்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கல்வி நிலைய விடுதிகளிலும் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுதிகளை மூடும் அபாயத்தை ஏற்படுத்தியு ள்ளது ஒன்றிய அரசு. பீதியில் பெட்ரோல் நிலையங்களிலும் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் நீண்ட வரிசையில் மக்கள் நிற்கின்ற அவலத்தை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் பீதியை போக்க ஒன்றிய அரசின் பிரதம அமைச்சர் நாடாளுமன்றத்திலோ அல்லது பொதுவெளியிலோ பேச மறுத்து வருவது வேதனைக்கும் கண்டனத்திற்கும் உரியது.

தமிழ்நாட்டுக்கான கல்வி நிதி 100 நாள் வேலை திட்ட நிதி குடிநீர் இணைப்பு நிதி என எந்த நிதியும் ஒதுக்காமல் நிறுத்தி வைத்திருப்பதோடு மதுரை கோவை மெட்ரோ ரயில் திட்டம் போன்ற எந்த வளர்ச்சி திட்டங்க ளையும் அனுமதிக்காத போக்கும், மும்மொழிக் கொள்கை எனக் கூறி தாய் தமிழ் மொழியை அழிக்கத் துடிப்பதும் தொடர்கிறது.

இப்படி தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் NDA அரசையும் அதன் அடிமை கூட்டணியையும் கண்டித்து கீழ்க்கண்ட இடங்களில் இன்று (15.03. 2026 – ஞாயிறு)காலை 10 மணி அளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதில் அந்தந்த பகுதியை சார்ந்த கூட்டணி கட்சி தோழர்களும் நமது இயக்கத்தைச் சார்ந்த மாவட்ட, மாநகர, பகுதி வட்டக் கழக, ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட அனை வரும் பெரும் திரளாக கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்ப வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வ.எண் பகுதி / ஒன்றியம் / பேரூர் இடங்கள் வருமாறு:

கன்னங்குறிச்சி பேரூர் கன்னங்குறிச்சி தபால் நிலையம் எதிரில் ஓமலூர் பேரூர் ஓமலூர் தபால் நிலையம் எதிரில் ஈஸ்வரன் கோவில் அருகில் கருப்பூர் பேரூர் கருப்பூர் தபால் நிலையம் எதிரில் காடை யாம்பட்டி பேரூர் காடையாம்பட்டி தபால் நிலையம் எதிரில் ஓமலூர் கிழக்கு ஒன்றியம் மேட்டுப்பட்டி தபால் நிலையம் எதிரில்

ஓமலூர் வடக்கு ஒன்றியம் தும்பி பாடி தபால் நிலையம் எதிரில் ஓமலூர் தெற்கு ஒன்றியம் பஞ்சு காளிப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் தாரமங்கலம் வடக்கு ஒன்றியம் ஆரூர்பட்டி பேருந்து நிறுத்தம் அருகில் காடையாம்பட்டி கிழக்கு ஒன்றியம் டேனிஸ்பேட்டை தபால் நிலையம் எதிரில்

காடையாம்பட்டி மத்திய ஒன்றியம் நடுப்பட்டி தபால் நிலையம் எதிரில் காடை யாம்பட்டி மேற்கு ஒன்றியம் காருவள்ளி தபால் நிலையம் எதிரில் சேலம் வடக்கு ஒன்றியம் சர்க்கார் கொல்லப்பட்டி சிட்டி யூனியன் வங்கி எதிரில்

ஓமலூர் மேற்கு ஒன்றியம் கோட்டகவுண்டம்பட்டி தபால் நிலையம் எதிரில் தாரமங்கலம் கிழக்கு ஒன்றியம் முத்து நாயக்கன்பட்டி பல்லவன் வங்கி எதிரில் சூரமங்கலம் பகுதி சூரமங்கலம் தபால் நிலையம் எதிரில் அம்மாபாளையம் பகுதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி எதிரில் மெய்யனூர் பகுதி BSNL அலுவலகம் கோகுலம் மருத்துவ மனை அருகில்

அழகாபுரம் பகுதி கனரா வங்கி அருகில், போர்லேண்ட்ஸ் அம்மாபேட்டை பகுதி கனரா வங்கி அருகில் அம்மாபேட்டை கிச்சிப்பாளையம் பகுதி கிச்சிபாளையம் தபால் நிலையம் எதிரில் கருங்கல்பட்டி பகுதி SBI அருகில் தாதகாப்பட்டி குகைப் பகுதி தபால் நிலையம் KS தியேட்டர் அருகில்

அன்னதானப்பட்டி SBI அருகில் அன்னதானப்பட்டி கொண்டலாம்பட்டி பகுதி கொண்டலாம்பட்டி சந்தை குமாரசாமிப்பட்டி பகுதி தபால் நிலையம் அருகில் நடேசன் காலனி அஸ்தம்பட்டி பகுதி கனரா வங்கி அருகில் கோரிமேடு அரிசி பாளையம் பகுதி IIHT தில்லை நகர் பொன்னம்மாபேட்டை பகுதி மன்னார் பாளையம் பிரிவு ரோடு கோட்டை பகுதி செவ்வாப்பேட்டை பகுதி கோட்டை மைதானம்

இவ்வாறு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் இரா.இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

---

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## தோழர் சாரங்கபாணி

### மார்ச் 15 (1965)



**மாயவரம் ஏ.வி.சி. கல்லூரியில் பயிலும் மாணவரான இவர், 1965ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாள் அன்று காலை கல்லூரிக்கு வந்து யாரும் காணாதபடி கல்லூரித் திடலில் தன்மீது மண்ணெண்ணை ஊற்றித் தீயிட்டுக் கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்த போது, அவரது முழக்கத்தை கேட்ட மாணவர்கள் தீயை அணைக்க முயன்று தோல்வியுற்றனர். குற்றுயிராக உள்ள சாரங்கபாணி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அங்கு "தமிழ்த் தாய்க்கு என் உயிரைத் தந்துவிட்டேன்" என்று கூறி முடிக்கவும் உயிர் பிரிந்தது.**

**சாரங்கபாணி மாணவர் நடத்திய இந்தி எதிர்ப்பு ஊர்வலங்களை முன்னின்று நடத்தியவர். மாயவரம் ரெயில் நிலைய அறப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**